**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No. 26/2024**

2025ம் ஆண்டு ஜீன் திங்கள் 04 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.மகாலிங்கம் | தாலுகா | : |
| த/ பெயர்<br>க/ பெயர் | :<br>: | கிராமம் | : |
| வயது | : | தொழில் | : |

**<u>வா.சா. 01</u>**
நாள் : 04.06.2025
நேரம் : 11.10. AM

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

1)கடந்த 10.08.2023ம் தேதி தாவா 2வது லக்க சொத்தை வாதியின் தந்தை 1ம் பிரதிவாதிக்கு மோசடியாக எழுதிக்கொடுத்த ஆவண எண். 1158/2023 என்ற பதிவு கிரைய பத்திரம் SRO கணினி நகல் **வா.சா.ஆ.1**

2)தாவா மொத்தச் சொத்தான பழைய சர்வே எண். 327/9A சொத்திற்கு வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை பச்சமால் பெயரில் ஏற்பட்ட 1183ம் நம்பர் பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.2**

3)தாவா 1வது லக்கச் சொத்தான சர்வே எண்.327/9A1 சொத்திற்கு பச்சமால்தேவர் பெயரில் ஏற்பட்ட 1183ம் நம்பர் பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3**

4)தாவா 2வது லக்கச் சொத்தான சர்வே எண்.327/9A2 சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட 2441ம் நம்பர் பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.4**

5)கடந்த 25.02.2024ம் தேதி இறந்துபோன வாதி மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை பச்சமால்தேவர் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.5**

6)தாவாச்சொத்திற்கான புலப்படம் கணினி நகல் **வா.சா.ஆ.6**

7)கடந்த 18.09.2024ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.7**

8)கடந்த 24.09.2024ம் தேதியிட்ட 2, 3 பிரதிவாதிகள், வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.8**

9)தாவாச்சொத்துக்களின் அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் **வா.சா.ஆ.9**

பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.17. AM

சாட்சியின் கையொப்பம்